THE HINDU BusinessLine பக்கம்



சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பிஎஸ் 5,
விதிமுறைகளைக் கொண்டு வந்தால்
அதற்குத் தேவைப்படும் தொழில்நுட்ப
முதலீடு செய்யும் வகையில் ஆட்டோ
தயாராக உள்ளதா என்று பார்க்க வே

• பி.வி.ஆர். சுப்பு, முன்னாள் தலைவர், ஹ

# ‘சொல்லிக் கொடுத்து வருவதில்லை தொழில்முனைவு’

வாசு கார்த்தி

**பே**ராசிரியர், **கிரேட் லேக்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்டின் நிறுவனர்,** எழுத்தாளர், மத்திய மாநில அரசுகளுக்கு மட்டுமல்லாமல் முக்கிய கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆலோசகர் என பல முகங்களைக் கொண்டவர் **பாலா வி பாலச்சந்திரன்.** வருடத்தின் பாதி நாட்கள் இந்தியாவிலும், மீதி நாட்கள் அமெரிக்காவில் வசிக்கும் பேராசிரியரை அவரது கல்லூரி அலுவலகத்தில் சந்தித்து உரையாடியதிலிருந்து...



▲ பாலா வி பாலச்சந்திரன், நிறுவனர் - கிரேட் லேக்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட்.

**இப்போது அமெரிக்காவுக்கு படிக்கச் செல்வதே கடினமாக இருக்கும் போது, 1960களில் எப்படி முடிந்தது. உங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் யார்?**

அறிவு மற்றும் அதனை செயல்படுத்தும் முறையில்தான் வெற்றி பெற முடியும் என நம்பினேன். இன்றைக்கும் இன்ஜினீயரிங் என்றால் ஜெர்மனிதான் முதல் இடத்தில் இருக்கிறது. அதேபோல நிர்வாகம், மேலாண்மை என்றால் அமெரிக்காதான். படிப்பது மட்டுமல்லாமல் அங்கே ஒரு பெரிய நெட்வொர்க்கை உருவாக்க முடியும். சர்வதேச அளவில் விரிவடைய முடியும் என்றால் அங்கே படித்தால்தான் முடியும் என்று நினைத்தேன். சாதாரண குடும்பத்தில் பிறந்து அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படித்து, அங்கேயே பணிபுரிந்தேன். ஐந்து வருடம் அங்கே இருந்தேன். அடுத்து எப்படியாவது அமெரிக்கா செல்ல வேண்டும் என்று முடிவு செய்தேன்.

அமெரிக்காவில் பேராசிரியர்கள் முடிவு செய்தால் நினைத்ததை செய்ய முடியும். அவர்களுக்கு உதவி மாணவராக செல்வதுதான் அமெரிக்காவுக்குச் செல்ல சரியான வழி என்பதை கண்டறிந்தேன். அப்போது அமெரிக்காவின் டேடன் பல்கலைக்கழக (Dayton university) பேராசிரியர் அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு வந்தார். அவருக்கு உதவி மாணவராக மாதம் 300 டாலர் உதவி தொகையில் அமெரிக்காவுக்கு சென்றேன். பொறியியலில் முதுகலை பட்டமும், கார்னிகி மெலன் பல்கலை கழகத்தில் எம்பிஏ மற்றும் முனைவர் பட்டத்தையும் பெற்றேன்.

**அமெரிக்காவில் எம்பிஏ பட்டம் பெற்ற பிறகு பெரிய நிறுவனங்களில் நல்ல வேலை கிடைத்திருக்கும். நீங்கள் ஒரு சிஇஓ ஆகி இருக்கலாம். ஏன் பேராசிரியராக முடிவெடுத்தீர்கள்?**

அமெரிக்காவில் எந்த ஒரு சிஇஓ-வும் அதிகபட்சம் ஐந்து வருடத்துக்கு மேல் நிலைக்க முடியாது. பேராசிரியராக இருப்பதில் கிடைக்கும் ஆனந்தம் சிஇஓ-வாக இருக்கும் போது கிடைக்காது. இதற்கு ஓய்வுகாலமே கிடையாது. என்னால் முடியும் வரை வேலை செய்யமுடியும். சிஇஓ-வாக இருந்தால் கூட நிறுவனத்தின் தலைவர் இயக்குநர் குழு போன்றவற்றுக்கு கட்டுப்பட்டாக வேண்டும்.

இன்னும் ஒரு உதாரணம் சொல்கிறேன். மார்கெட்டிங் துறையின் முக்கியமான பேராசியர் பிலிப் காட்லர். தியரிபடி பார்த்தால் அவர் பணிபுரியும் நிறுவனத்தின் சிஇஓ - தீபக் ஜெயின். ஆனால் சர்வதேச புகழ்பெற்றவர் பிலிப் காட்லர். சான்றோருக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு.

**இந்திய நிர்வாக கல்லூரிகள் சர்வதேச கல்லூரிகள் பட்டியலில் வரவில்லையே ஏன்?**

பேராசிரியர்கள்தான் காரணம். சிறப்பான பேராசிரியர்கள் இருக்கும் போதுதான் சர்வதேச எல்லையை தொட முடியும். சர்வதேச அளவில் சிறப்பான மூளைகளாக இந்தியர்கள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இந்தியாவில் இல்லை. வெளிநாட்டில் பணிபுரிந்து இந்தியாவில் பேராசிரியராக இருக்கும் போது அவர்களின் அறிவைதாண்டி, அனுபவம், நெட்வொர்க் ஆகியவையும் கைகொடுக்கிறது.

**நிர்வாக கல்லூரிகளை வரிசைப் படுத்துவது சரியா?**

நிர்வாக கல்லூரிகளை ஒன்று, இரண்டு என்று வரிசைப்படுத்துவதை விட முதல் 10 இடங்கள் என்று வரிசைப்படுத்தலாம். தவிர ஒரு கல்லூரி அனைத்து சிறப்புகளையும் பெற்றிருக்க முடியாது. மார்க்கெட்டிங் பிரிவில் கெல்லாக்ஸ் முதல் இடத்தில் இருக்கிறது. நிதிப் பிரிவில் சிகாகோ பல்கலை முதலிடத்திலும், ஸ்ட்ராட்ரஜி பிரிவில் ஸ்டான்போர்டு முதல் இடத்தில் உள்ளது. அனைத்து பிரிவிலும் ஒரே கல்லூரியில் முதலிடத்தில் இருக்க முடியாது.

**திருபாய் அம்பானி, ஜம்ஷெட்ஜி டாடா ஆகியோர் எம்பிஏ படிக்கவில்லை. படிக்காமல்தான் பெரிய நிறுவனங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இப்போது நிர்வாக கல்லூரிகளில் தொழில்முனைவு வகுப்பு இருக்கிறதே. சொல்லிக் கொடுத்தால் தொழில்முனைவு வந்துவிடுமா?**

நிச்சயம் வராது. சம்பந்தபட்டவரின் டிஎன்ஏவில் இருக்க வேண்டும். தொழில் செய்ய வேண்டும் என்ற வெறி இருக்க வேண்டும். ரிஸ்க் எடுக்க வேண்டும். சிலருக்கு அந்த ஆற்றல் இருப்பது அவருக்கே தெரியாமல் முடங்கி இருக்கலாம். உதாரணத்துக்கு நான் பல வருடங்கள் பேராசிரியராக இருந்தாலும், கல்லூரி தொடங்குவது பற்றிய எண்ணமே இல்லை. நண்பர் மகேந்திரன் ஏன் சென்னையில் தொடங்கக் கூடாது என்று யோசனை கூறவே அதன் பிறகு நான் வேலையை ஆரம்பித்தேன். 65 வயதுக்கு பிறகு ரிஸ்க் எடுத்து சென்னையில் இருக்கும் என்னுடைய வீட்டை விற்று இந்த கல்லூரியை தொடங்கினேன்.

டிஎன்ஏ உடம்பில் இருந்தாலும் முகேஷ் அம்பானி, அனில் அம்பானி ஆகியோர் எம்பிஏ படித்திருக்கிறார்கள். நிறுவனத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்ல எம்பிஏ தேவை. இசையை கற்றுக்கொண்டால் வாசிக்கலாம். ஆனால் இசையை உருவாக்குவது என்பது டிஎன்ஏவில் இருக்க வேண்டும். அடுத்த வருடம் நாங்கள் technoentrepreneurship கொண்டு வரப்போகிறோம். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொழில்முனைவு செய்வது குறித்தபடிப்பு இது. வழக்கமான நுழைவு தேர்வு மூலமாக அல்லாமல் பிரத்யேகமாக இந்த படிப்புக்கான மாணவர்களை தேர்வு செய்யபோகிறோம்.

karthikeyan.v@thehindutamil.co.in